28th March 1961]

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 1 and the Preamble were put and carried.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1961, as passed by the Legislative Council, be passed.'

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1961, as passed by the Legislative Council, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(7) THE MADRAS WAKF (SUPPLEMENTARY) BILL, 1961 (L.A. BILL NO. 10 OF 1961).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Wakf (Supplementary) Bill, 1961 (L.A. Bill No. 10 of 1961), [a] be taken into consideration.'

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இது முகம்மதிய தர்ம ஸ்தாபனங்கள் பரிபாலனத்தைப் பற்றியது. இதைப் பற்றி 1954-ம் வருஷத்திலே பார்லிமெண்ட் சபையிலே ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் 1955-லே அமுலுக்கு வந்தது. அது இங்கும் அமுலில் இருக்கிறது. அதையொட்டி ஒரு வக்ஃப் போர்டுகூட அமைக்கப்பட்டிருக்கிறது. பூர்வாங்கமாக சர்வே செய்யப்பட்டு வக்ஃப் போர்டு இப்போது தொண்டாற்றி வருகிறது. முகம்மதிய தர்ம ஸ்தாபனங்களுக்கு சொத்தெல்லாம் இருக்கிறது. பராதீனமும் செய்யப்படுகிறது. சரியாக நடக்கவேண்டும் என்பதில் எல்லோருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் வேண்டுமானுல் இதில் நம்பிக்கை இல்லை என்று சொல்லலாம்—ஆனுல் அவர்களும் முகம்மதியர்கள் விஷயத்தில் அந்த மாதிரி சொல்லத் துணியமாட்டார்கள்—இதை நிச்சயம் வரவேற்பார்கள். சமீபத்திலே அகில இந்திய ரீதியில் ஒரு மாநாடு நடந்தது. அதில் பெரிய பெரிய மௌலிகள் வந்து கலந்துகொண்டார்கள். இந்தச் சட்டத்தை நடத்துவதில் ஒரு குறைபாடு இருக்கிறது. இந்த வக்ஃப் என்ருல் எது—முகம்மதிய தர்ம ஸ்தாபனங்கள் என்ருல் எது—என்று சட்டத்திலே டெஃபனிஷன் எப்படி இருக்கிறது என்ருல் முகம்மதிய மத சம்பந்தமான தர்மங்கள் நடத்த முகம்மதியர்களால் விடப்பட்ட சொத்து என்று, அது ஜங்கம சொத்தாக இருக்கலாம் அல்லது ஸ்தாவர சொத்தாக இருக்கலாம் என்ற முறையில் இந்தச் சட்டத்திலே இருக்கிறது. இப்போது என்ன நிலைமை என்ருல், இதை எல்லோரும் உணர்ச்சியுடன் தெரிந்துகொள்ள வேண்டும், இதை ஒரு பாடமாகக் கூட நினைத்துக் கொள்ள வேண்டும். பல ஹிந்துக்கள், பல ஹிந்து ராஜாக்கள் முகம்மதிய தர்ம ஸ்தாபனங்களுக்கு சொத்துக்களை விட்டிருக்கிருர்கள். இப்போது முகம்மதியரல்லாதவர்கள் விட்ட சொத்துக்கள் இந்தச் சட்டத்தின்கீழ் வரவில்லை. இன்னும் இன்றைய தினம் நாகூரில் எடுத்துக்கொண்டால் அது ஒரு மகம்மதியர் ஆலயம், அங்கே ஹிந்துக்கள் கூட வருகிருர்கள். பண்டை காலத்தில் இந்த மாதிரி வித்தியாசம் பாராட்டுவதில்லை. ஹிந்துக்கள் முகம்மதிய தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொத்து விட்டிருக்கிருர்கள். அதே மாதிரி ஹிந்து ஆலயங்களுக்கு முகம்மதிய ஆட்சியாளர்கள் சொத்து விட்டிருக்கிருர்கள். முகம்மதியர் விட்டது

---

[a] Published in the *Fort St. George Gazette*, dated 23rd February 1961.

மாத்திரமல்ல, வெள்ளைக்கார ஆட்சியாளர்கள் கூட ஹிந்து ஆலயங்களுக்கு சொத்து விட்டிருக்கிறார்கள். காந்தியடிகள், எவ்வளவு தான் நம் சமயத்திலே பற்று இருந்தாலும் பிற சமயத்தைப் பற்றி தூஷிக்கக் கூடாது, மரியாதை செலுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இது காந்தியடிகள் காட்டிய வழி. அந்த முறையில் தான் எந்த சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பல ஆட்சியாளர்கள் இன்னும் மற்றவர்கள் தர்ம ஸ்தாபனங்களுக்கு சொத்து கொடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து நாம்கூட ஒரு நல்ல பாடம் கற்றுக்கொள்ளவேண்டி யிருக்கிறது.

இந்த மசோதாவைப் பொறுத்த மட்டில் முகம்மதியரல்லாதவர்கள் முகம்மதிய ஸ்தாபனங்களுக்கு சொத்து விட்டிருந்தாலும் அவைகளும் இந்தச் சட்டத்தின் கீழ் வர வேண்டுமென்பது தான் நோக்கம். அகில இந்திய அடிப்படையில் பார்லிமெண்ட்டில் சட்டம் வந்தது. மற்ற ராஜ்யங்களில் இருக்கிறதோ இல்லையோ எங்கள் ராஜ்யத்திலே இப்படி இருக்கிறதே இதற்கு ஒரு திருத்தம் வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் நாங்கள் கேட்டோம். அதற்கு அவர்கள் நீங்கள் திருத்தம் செய்துகொள்ளுங்கள், ஆட்சேபணை இல்லை என்று சொன்னார்கள். இது இந்தியச் சட்டத்திற்கே திருத்தம். ஆகவேதான் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER: **Motion moved—**

'That the Madras Wakf (Supplementary) Bill, 1961 (L.A. Bill No. 10 of 1961) be taken into consideration.'

* SRI R. SRINIVASA IYER: Sir, while welcoming this measure, I wish to say a few words. Under entry 28, Schedule 7, List III of the Constitution, we find that charitable institutions and religious endowments have been included in the Concurrent List. The Central Act XXIX of 1954 has been in force in this State from 1955. But, we have enacted the Hindu Religious and Charitable Endowments Act in such a way as people would say that it was the best Act with reference to our religious and charitable institutions and endowments. Being in Pattukkottai, a part of Tanjore, where there are a large number of Dargas and other institutions to which the Mahratta Rulers of Tanjore in those days had dedicated very large extents of properties, besides a number of Muslim people professing Islam having endowed very large extent of properties to certain wakfs, I am afraid I have got to bring to the notice of the Government that in spite of the enforcement of this Act, those wakfs are not being managed efficiently or properly. They are not run for the best advantages or for the purpose for which they were created. No doubt, the wakfs are intended to benefit some beneficiaries on the pretext that they are the hereditary trustees and some schemes in that regard have also been framed. The objects of the wakf are not fully carried out. What I desire to point out in this connection is that after the Shariat Act was passed in 1939 or so, all Muslims were governed by the Personal Law; but after our present Indian Constitution came into force, and these things are included in List III. I would like to know why we should not pass a comprehensive legislation with reference to wakfs without injuring in any way Muslim ideas or their religious tenets. That will be for the benefit of the very institutions for which these wakfs are

28th March 1961] [Sri R. Srinivasa Iyer]

created. Of course, we may have to send it for the President's consent or reserve it for his consideration, as otherwise it may not be possible for us to enact that measure here.

Another important point that I wish to refer in this connection is this. In the original Act, I do not find any restriction with regard to the person to be appointed as Commissioner or the religious attachments of the person who was to be appointed Commissioner under that Act. As a matter of course, only Muslims are appointed. There is a chance of their being, in some way or other, influenced by the circumstances under which these wakfs are managed. We should really appreciate the laudable object with which Hindu Rulers had given gifts of valuable properties to Muslim religious institutions. We should also appreciate in the same way the laudable object of the Nawab of Carnatak and other Muslim Rulers who had endowed large extents of properties to Hindu religious institutions for lighting lamps and such other purposes in Muslim religious institutions. If only we go through old history which is found in copper plates found in Dargas in Adhirampatnam, Mudukur and other places, we will be surprised to know of the vast extent of properties endowed by Hindus to Muslim institutions. I hope the Government will take the earliest opportunity to go through the various aspects of the matter and to bring forward a comprehensive legislation, as this is included in the Concurrent List, of course after taking the consent of the President in the matter.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இது ஒரு முக்கியமான திருத்தம்—ஆனால் சிறிய திருத்தம். கனம் அங்கத்தினர் பேசியபோது இன்னும் பல திருத்தங்கள் நிறைவேற்ற வேண்டும். இந்த பூரா சட்டத்தையும் நம் ராஜ்யத்தில், இது கன்கரண்ட் லிஸ்ட்டில் இருப்பதால், இங்கே தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னார்கள். நான் கூறியதுபோல 4–5 ஆண்டுகளாக எவ்வாறு நடத்தப்பட்டு வருகிறது, இன்னும் என்ன செய்ய வேண்டும், என்று இதிலே பொறுப்பு வகிக்கும் அமைச்சர்கள், மற்றும் இதிலே அக்கறை கொண்ட அங்கத்தினர்கள் மற்றப்படி மௌலிகள் எல்லோரையும் சேர்த்து 2–3 மாதங்களுக்கு முன் இரண்டு நாள் விவாதம் நடந்தது—ஒரு மாநாடு நடந்தது. அங்கே பல விஷயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மேலும் பார்லிமெண்டில்கூட சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தைப் பொறுத்த மட்டில் நீங்களே நிறைவேற்றி விடுங்கள் என்று சொன்ன காரணத்தினால் இது இப்போது இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. காம்ப்ரெஹென்ஸிவ் லெஜிஸ்லேஷனை நாம் எடுத்துக்கொள்வது முறையல்ல. ஒவ்வொரு ராஜ்யத்திலும் இருக்கும் நிலைமையைப் பொறுத்து பார்லிமெண்ட்டில் ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினால் தான் நலம். இதைப்பற்றி மத்திய அரசாங்கமும், சம்பந்தப்பட்ட மற்ற அரசாங்கங்களும் கவனம் செலுத்துவார்கள், செலுத்திக்கொண்டு வருகிறார்கள். இந்த வார்த்தைகளோடு, இந்த மசோதாவை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Wakf (Supplementary) Bill, 1961 (L.A. Bill No. 10 of 1961) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Wakf (Supplementary) Bill, 1961 (L.A. Bill No. 10 of 1961) be passed.'

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Wakf (Supplementary) Bill, 1961 (L.A. Bill No. 10 of 1961) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(8) THE MADRAS IRRIGATION CESS (AMENDMENT) BILL, 1961 (L.A. BILL NO. 17 OF 1961)—DISCUSSION—cont.

DEPUTY SPEAKER : Now the discussion on the Madras Irrigation Cess (Amendment) Bill, 1961, will be continued.

SRI A. R. MARIMUTHU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இர்ரிகேஷன் செஸ் மசோதா இந்த சபையிலே நன்கு ஆலோசிக்காத முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். இப்போது சில புது திட்டப் பகுதிகளிலே இது அமுலில் இருக்கிறது. ஆகவே இதர இடங்களிலும் அமுலாக்க வேண்டுமென்ற கருத்துடன்தான் இப்போது இது இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது அமுலிலே இருக்கிற பகுதிகளில் என்னென்ன நலன்கள் கிடைத்திருக்கிறது என்பதைத் திட்டவட்டமாக அறிந்த பின்னர், இதை இதர இடங்களுக்கும் மேலும் பலன் கிடைக்குமென்று இந்தச் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வருவதற்கு உத்தேசித்து, அந்த முறையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். அப்படியெல்லாம் இல்லாமல் ஒரு பகுதியிலே இருக்கிறது, இதை மற்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கொண்டு வருவதானது தவறாகும் என்பதை இந்தச் சமயத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது மேட்டூர் பாசனப் பகுதியை எடுத்துக் கொண்டால், அங்கே கடந்த 25 ஆண்டுகளாக பாசன வசதி செய்யப்பட்டு இருக்கிறது. இன்னும் பல இடங்களில் தண்ணீர் வாய்க்கால் மூலமோ, அல்லது வேறு வகைகளிலோ சரியாகப் பாயாத நிலை இருக்கிறது. பல கோரிக்கைகள் இப்போது அந்தந்தப் பகுதிகளிலிருந்தும், மாவட்டங்களி லிருந்தும் வந்து அவைகள் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, வேறு இடங்களுக்கு இவைகளை எப்படி மாற்ற வேண்டும், எங்கு பாசன வசதி கம்மியாக இருக்கிறது, எங்கெங்கெல்லாம் தரிசு நிலங்கள் அதிகமாக இருக்கிறது, அவைகளுக்கு நேரடியாகப் பாய்வதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்ற கோரிக்கைகள் பல இடங்களிலே இருக்கிறது. இன்னும் தண்ணீரானது பல வாய்க்கால்களிலே நல்ல முறையில் பாய்ச்சப்படாமல், தண்ணீர் ஒழுங்காக சப்ளை செய்ய முடியாததினால் வருஷா வருஷம் நிலங்கள் எல்லாம் தரிசாகப் போகின்றது என்று தந்திகள் மூலம் அமைச்சர்கள் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வரக்கூடிய நிலைமையைப் பார்க்கின்றோம். இப்படித் தந்தி கொடுப்பவர்கள் ஏதோ நிலத்தை தரிசு போட வேண்டுமென்று போடவில்லை. அவர்கள் அப்படி நிலத்தைத் தரிசாகவே போட மாட்டார்கள். அப்படிப் போடுவதால், அவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படும். ஆகவே தண்ணீர் வசதி இல்லாமையால் அவன் தன்னுடைய நிலத்தைத் தரிசாகப் போடுவானே தவிர, சும்மா தரிசாக நிலத்தைப் போடுவதற்கு வழியே கிடையாது.